இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
இடைநிலை, மூன்றாம்நிலை கல்வித் துறை
கல்விப்பீடம்
முதுகல்விமாணி நிகழ்ச்சித்திட்டம்
இறுதிப்பரீட்சை - **2018/2019**
**ESP2311/STP9811** – கல்வியின் உளவியல் அடிப்படைகள்
காலம்: 03 மணித்தியாலங்கள்

---

நேரம் : மு.ப 09.30 – நண்பகல் 12.30 திகதி : 16.03.2019

---

ஏதாவது நான்கு(04) வினாக்களுக்கு விடையளிக்குக

01. "பிள்ளை விருத்தி என்பது சிக்கலானது காரணம் இதில் பலவிதமான செயன்முறைகள் பங்கெடுக்கின்றன"

 (i) பிள்ளையின் விருத்தியில் பங்கெடுக்கின்ற இரு செயன்முறைகளைச் சுருக்கமாக விளக்குக? (05 புள்ளிகள்)

 (ii) பண்டுராவினது சமூககற்றல் கோட்பாட்டினது(Social Learning Theory) அடிப்படைத் தத்துவங்களை விளக்குக? (10 புள்ளிகள்)

 (iii) பண்டுராவினால் முன்வைக்கப்பட்ட அடிப்படைத் தத்துவங்களோடு தொடர்புபடுத்தி பிள்ளையின் விருத்தியில் ஆசிரியரின் வகிபங்கினை பரிசீலிக்குக? (10 புள்ளிகள்)

02. (i) 'வாழ்க்கைக்கால விருத்தியில் பல்வகைமை' என்பதனால் நீங்கள் கருதுவது யாது? உதாரணம் ஒன்றுடன் விளக்குக? (05 புள்ளிகள்)

 (ii) எரிக்சனின் வாழ்க்கால விருத்திக்கான உளச்சமூக கோட்பாட்டினது(Psycho-Social Theory) இரு பிரதான தத்துவங்களை விளக்குக? (10 புள்ளிகள்)

 (iii) வகுப்பறையில் மாணவர்களின் விருத்தியின் பல்வகைமையினை விளங்கிக் கொள்வதற்கு எரிக்சனின் உளச்சமூக கோட்பாட்டினது பயன்படுதன்மையைப் பரிசீலிக்குக? (10 புள்ளிகள்)

03. (i) ஹாவார்ட் காட்ணரின் நோக்குகையின் அடிப்படையில் 'நுண்மதி' என்ற எண்ணக்கருவை வரைவிலக்கணம் செய்க? (05 புள்ளிகள்)

 (ii) அ. ஹாவார்ட் காட்ணரினால் அறிமுகப்படுத்தப்பட்ட பன்முக நுண்மதிகளை சுருக்கமாக விளக்குக?

 ஆ கற்றல்-கற்பித்தல் செயன்முறையை மேலும் வினைத்திறன்மிக்கதாக்குவதற்கு ஆசிரியரொருவருக்கு பன்முக நுண்மதிக் கோட்பாட்டினது பயன்பாடுகள் நான்கினை (04) உதாரணங்களுடன் பரிசீலிக்குக? (10 புள்ளிகள்)

07. “கல்வி அடைவினது வெற்றியும் தோல்வியும் பல்வேறுபட்ட காரணிகளின் செல்வாக்கிற்கு உட்படுகின்றன”

(i) ‘அடைவு ஊக்கம்’ என்பது பற்றி நீங்கள் கருதுவது என்ன? (05 புள்ளிகள்)

(ii) ஜோன் அட்கிட்ஸன் என்பவரால் முன்வைக்கப்பட்ட அடைவு ஊக்கத்தின் பிரதான தத்துவங்களைச் சுருக்கமாக விளக்குக? (10 புள்ளிகள்)

(iii) மாணவர் மத்தியில் தோல்வி என்ற பயத்தினை நீக்குவதற்கு ஆசிரியரால் பின்பற்றக்கூடிய ஊக்கல் உபாயங்கள் குறைந்தது நான்கினை (04) ஆராய்க? (10 புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது*